## 2.1 தரவு மற்றும் தகவல் (Data & Information)

- தரவு (Data) என்றால் என்ன?
- தகவல் (Information) என்றால் என்ன?
- தரவு மற்றும் தகவலுக்கிடையேயான வேறுபாடு
- தரவுகள் தகவலாக மாற்றப்படும் செயன்முறை

### தரவு (Data)

- எந்தவொரு பொருளையும் பற்றிய தனித்தனியான உண்மைகள், எண்கள், எழுத்துகள், குறியீடுகள், படங்கள் அல்லது அளவுகள் ஆகியவை தரவு (Data) எனப்படும்.
- தரவிற்கு தனியாக முழுமையான பொருள் இருக்காது.
- தரவிற்கு உதாரணங்கள் -

45 89 A ★ 2026 சிவா 75 82 91

### தகவல் (Information)

- தரவுகளை ஒழுங்குபடுத்தி, முறைவழிப்படுத்தி, பொருளுடையதாக மாற்றிய பின் கிடைப்பது தகவல் (Information) ஆகும்.
- தகவலிற்கு சில உதாரணங்கள்
  - மாணவரின் சராசரி 53.3
  - ரவி தவணைப் பரீட்சையில் முதலாம் மாணவர்.
  - குமாரை விட ப்ரவீன் உயரமானவர்.

### தரவு மற்றும் தகவலுக்கிடையிலான வேறுபாடு

| தரவு | தகவல் |
|---|---|
| அடிப்படை உண்மைகள் | முறைவழிப்படுத்தப்பட்ட உண்மைகள் |
| பொருள் அற்றது. | பொருள் உடையது. |
| தீர்மானமெடுக்க உதவாது. | தீர்மானமெடுக்க உதவும். |
| ஒழுங்கற்றதாக இருக்கும் | ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருக்கும் |

### தரவுகள் தகவலாக மாற்றப்படும் செயன்முறை (Information Processing Cycle)

1. உள்ளீடு (Input) - கணினிக்குள் தரவை உள்ளிடுவது.

- இதற்காக விசைப்பலகை, சுட்டி, வருடி, நுணுக்குப்பண்ணி போன்ற உள்ளீட்டு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

LKEXAM.COM

2. முறைவழியாக்கம் (Processing) – கணினியானது உள்ளீட்டு சாதனங்களால் உள்ளிடப்படும் எண்கள், எழுத்துக்கள், குறியீடுகள் போன்ற தரவுகளை தகவலாக மாற்றும்.

3. சேமித்தல் (Storage) - தகவலை எதிர்கால பயன்பாட்டிற்காக சேமித்தல்.

- முறைவழியாக்கப்பட்ட தகவல்களை கணினியின் வன்வட்டு போன்ற தேக்கக சாதனங்களின் உதவியுடன் சேமிக்க முடியும்.

4. வெளியீடு (Output) - பயனருக்கு முறைவழியாக்கப்பட்ட தகவல்களை காட்டுதல்.

- இதற்காக தெரிவிப்பி, அச்சுப்பொறி போன் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

LKEXAM.COM